**பலாங்கொடை பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 19 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 20 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பலாங்கொடை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட சபைக்குச் சொந்தமான 16 காணிகளுக்குரிய பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் நாட்குறிப்புப் பதிவுகள் தயாரிக்கப்படாமல் பெற வேண்டிய, முன்கொண்டு வரப்பட்ட மற்றும் இறுதியிருப்புக்கள் தொடர்பாக 14 கணக்குகளுக்குரிய ரூபா 20,313,692 கூட்டுமொத்தமும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) பொருட் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்ட ரூபா 9,625 பெறுமதியான 25 சிறுவர் பிளாஸ்டிக் கதிரைகள் இறுதியிருப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 36,694 தொகையான காகிதாகிகளின் ஆரம்ப இருப்பு மற்றும் ரூபா 24,895 தொகையான காகிதாகிகளின் இறுதியிருப்பு என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் தாமஹன சுடலைக் கூடத்தை பழுது பார்ப்பதற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 994,980 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்குரியதாக 04 தொலைத் தொடர்பு கோபுரங்களிலிருந்து கிடைக்க வேண்டிய வியாபார வரியான ரூபா 12,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) வழங்கப்பட்ட ரூபா 9,450 கூட்டுத்தொகையான இரண்டு காசோலைகள் காலாவதியாகியிருந்தமையால் வருமானத்திற்கு எடுக்கும் போது செலவினங்களை மீளச் செலுத்தும் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) மூன்று ஊழியர்களிடமிருந்து மேலதிகமாக அறவிடப்பட்ட ஊழியர் கடன் தவணைப் பணங்களின் ரூபா 12,500 கூட்டுத்தொகை பொறுப்பொன்றாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) காற்றாடி மின்வலு நிலையத்திலிருந்து மீளாய்வாண்டிற்குரியதாகக் கிடைக்க வேண்டிய ரூபா 63,690 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

-----------------------------------------------------------------------------------------------

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற ஏக்கர் வரியான ரூபா 14,037 தொகையை 2018 மார்ச் வரையிலும் அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய 09 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற சந்தை அனுமதிப்பத்திரக் கட்டணமான ரூபா 96,100 தொகையை 2018 மார்ச் வரையிலும் அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்குரியதாகக் கிடைக்கவேண்டிய நிலுவையான வெலிஓய கடை வாடகையான ரூபா 16,818 தொகை 2018 மார்ச் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) சபைக்குரித்தான குடியிருப்பிற்காக வாடகைக்கு வழங்கப்பட்ட யஹகளு மூகலான பிரதேசத்தின் 09 நிலக் கூறுகளுக்காக 1996 ஆம் ஆண்டு முதல் அறவிட வேண்டிய வாடகையான ரூபா 43,350 அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

---------------------------------------------------------

2009, 2012, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 288,895 கூட்டுத்தொகையான 06 செலவினக் கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்ப்பதற்கு 2018 மார்ச் வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

-----------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 142,362,930 கூட்டுத்தொகையான 12 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) ரூபா 130,986,164 கூட்டுத்தொகையான 27 நாட்குறிப்புக்களுக்காக நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 இணங்காமைகள்**

**1.3.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச் சட்டங்களில் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் | - | 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை விநியோகிக்கப்பட்ட செல்லுபடிக் காலம் முடிவடைந்திருந்த 03 கைத்தொழில்களின் செயற்படு நிலையை பரிசோதனை செய்து தேவையின் பிரகாரம் மீண்டும் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக 2015 ஆம் ஆண்டு முதல் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில்கள் தொடர்பான மெய்மையாய்வும் 2018 மார்ச் வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதி | | |
| | (i) விதி 14 | 6,514,077 | பாதீட்டில் வெளிப்படுத்தப்படாத 06 செயற்திட்டங்களின் செலவினத்திற்காக குறைநிரப்பு மதிப்பீடொன்று தயாரித்து செயற்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) விதி 143 | - | ஒவ்வொரு வகுப்பினதும் வைப்புக்களுக்குரிய பேரேடுகள் மாதாந்தம் சமப்படுத்தப்பட்டு அந்த மீதிகளின் கூட்டுத்தொகை பிரதான பேரேட்டுக் கணக்கின் மீதியுடன் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) விதி 178(6)(5) | - | சபையினால் நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் நிபந்தனைகளை முறித்த ஒப்பந்தகாரர்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) விதி 214 | 125,490 | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலைக் களஞ்சிய இருப்பு தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயகக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | (i) நிதிப்பிரமாணம் 262(2) | 1,927,695 | செலுத்தப்பட்ட சகல உறுதிச் சீட்டுக்களிலும் அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களிலும் ''செலுத்தப்பட்டது'' என்ற முத்திரை இடப்பட வேண்டியிருந்த போதிலும் 17 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தொடர்பாக அதன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 371(5) | 489,589 | 1992 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வழங்கப்பட்ட 35 முற்பணங்கள் 2018 மார்ச் வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) நிதிப்பிரமாணம் 571 | 981,934 | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கில் காணப்பட்ட உரித்துக் கோரப்படாத ''காலாவதியான'' 258 வைப்புக்கள் தொடர்பாக பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு வைப்பினை ஓய்வுபெறச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) நிதிப்பிரமணம் 574 | - | ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் பொருட் பதிவேட்டு புத்தகங்களில் பெறுவனவுகள் மற்றும் விநியோகித்தல்கள் சீராக்கப்பட்டு சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | 770,580 | சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட கணனி மற்றும் கணனி துணைப்பாகங்கள் தொடர்பான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2009 யூன் 09 ஆந் திகதிய 2009(1) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை | - | மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2012 சனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | | |
| | 3.1 ஆம் பிரிவு | 11,428,993 | நிறைவேற்றுப் பொறியியலாளர் மற்றும் பிரதேசத்தின் பிரதேச செயலாளர் என்போரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற இரண்டு பிரதிநிதிகளை உள்ளடக்கிய மூவர் குழுவொன்றின் மூலம் சனசமூக அமைப்புக்களின் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு பொருத்தமான ஒப்பந்தகாரர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், 20 ஒப்பந்தங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 2015 யூலை 15 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2013 யூன் 05 ஆந் திகதிய PCMO/PR/2013 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதம் | - | பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரகாரம் செயற்பாடற்ற நிலையில் காணப்படுகின்ற கெப் வண்டி, நான்கு சக்கர உழவு இயந்திரங்கள் இரண்டு, இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் 03, 04 இழுவைப் பெட்டிகள் மற்றும் 22 உழவு இயந்திர உதிரிப்பாகங்கள் என்பனவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 1975 இன் உள்ளூராட்சி ஓய்வூதிய கட்டளையின் 36 ஆம் பிரிவு | 1,011,237 | 1993 செப்தெம்பர் 03 இற்கு முன்னர் ஓய்வு பெற்றுச் சென்ற உள்ளூராட்சி சேவையின் ஓய்வு பெற்ற உத்தியோகத்தரொருவருக்காக ஓய்வுதியத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்புப் பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,830,848 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,957,476 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரியும் வரியும் | 1,523,380 | 1,523,380 | 2,324,990 | 253,318 | 1,438,380 | 1,438,380 | 1,648,647 | 250,585 |
| ii. | வாடகை | 3,553,375 | 3,553,375 | 2,188,057 | 158,343 | 4,175,955 | 4,175,955 | 1,268,775 | 99,848 |
| iii. | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 232,500 | 232,500 | 312,310 | 96,100 | 264,500 | 264,500 | 287,453 | 109,700 |
| iv. | ஏனைய வருமானம் | 71,595,637 | 71,595,637 | 46,236,234 | 14,977,541 | 68,354,029 | 68,354,029 | 48,499,403 | 15,652,610 |

**2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் வாடகை வருமானத்தில் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 622,580 இனால் குறைவடைந்திருந்தது.

**2.2.3 வீதவரியும் வரியும்**

**(அ) ஆதனவரி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அறவிட முடியாத ரூபா 186,988 தொகையான நிலுவை ஆதனவரியை உள்ளடக்கி மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த ஆதனவரியான ரூபா 213,635 தொகை 2018 மார்ச் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சபை அதிகாரப்பிரதேசத்தில் இனங்காணப்பட்ட 645 ஆதனவரி அலகுகளுக்காக 2005 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டு முதல் தற்போது வரையிலும் அறவிடப்பட்டுக் கொண்டிருந்ததுடன் உள்ளூராட்சி ஆணையாளரின் 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய மதிப்பீடொன்றின் மூலம் ஆதனவரி திருத்தம் செய்யப்பட்டு ஆதனவரி வருமானத்தை அதிகரிப்பது தொடர்பில் கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

**(ஆ) நீர்க் கட்டணம்**

2009 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 14,440 தொகையான கிடைக்க வேண்டிய நீர்கட்டணம் 2018 மார்ச் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,197,253 மற்றும் 2015 ஆம் ஆண்டிற்குரிய கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் என்பனவற்றை இனங்கண்டு அறவிட்டுக் கொள்வதற்கு 2018 மார்ச் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்களின் சுகாதாரம், பொதுப் பண்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், மக்களின் நலன் விவகாரம், வசதிகள் மற்றும் நலன்புரிகள் போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபை அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக முறையான சாத்தியவள ஆய்வு மேற்கொண்டு கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் உக்கும் மற்றும் உக்காத கழிவுகளை வேறுபடுத்தாமல் சபை அதிகாரப் பிரதேசத்தில் சில இடங்களில் அகற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) சபையின் மூலம் கொடகும்புற கிராம உத்தியோகத்தர் பிரிவில் அனிச்சியாவத்த ஹேன என்ற பெயருடைய இடத்தில் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக வனபாதுகாப்பு பணிப்பாளர் நாயகத்திடமிருந்து ஒரு ஏக்கர் காணி 2015 ஆம் ஆண்டில் ரூபா 22,600 வருடாந்த வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த போதிலும், பொதுமக்கள் எதிர்ப்பின் காரணமாக, அந்தக் காணி கைவிடப்பட்டிருந்தது. அவ்வாறே கழிவுப்பொருள் அகற்றுவதற்காக பொருத்தமான இன்னுமொரு இடத்தை கண்டறிவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிவிக்காமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலத்தில் சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 6,765,000 கூட்டுப் பெறுமதியான 03 உழவு இயந்திரங்களை சபைக்கு கையேற்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1994 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக 69 ஒப்பந்தகாரர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 280,711 தொகையான ஒப்பந்த பிணைப் பணம் தொடர்பாக 2018 மார்ச் வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 யூன் 20 ஆந் திகதி நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் சபை அலுவலகத்தின் கராஜிற்கு இடையூறாகக் காணப்பட்ட வெட்டி அகற்றப்பட்டிருந்த பலாமரக் குற்றிகளை கிழித்து பலகைகளாக ஆக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 மார்ச் வரையிலும் அத்தீர்மானம் அமுல்படுத்தப்பட்டிருக்காமையின் காரணமாக 35.48 கனமீற்றர் பலா மரம் உக்கும் நிலைக்குள்ளாகியிருந்தது.

(ஈ) தீயணைப்பு உபகரணங்களின் 02 தொகுதிகளை தாமஹன சுடலைக் கூடத்தில் பொருத்துவதற்காக 2015 மே மாதம் எடுக்கப்பட்ட சபைத் தீரடமானம் 2018 மார்ச் வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 ஆம் ஆண்டில் பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தாமஹன சுடலைக் கூடத்தின் பெயர்ப் பலகையை பழுதுபார்ப்பதற்காக ரூபா 200,000 செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டு கடன்கொடுத்தோரின் கீழ் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், உரிய பணிகள் 2018 மார்ச் வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மூன்றாம் சேவை மட்டத்தில் அரச முகாமைத்துவ உதவியாளர் அதிவிஷேட தரத்தில் செயலாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அரச முகாமைத்துவம் தரம் I இன் உத்தியோகத்தருக்கு 2017 ஆம் ஆண்டு முதல் செயலாளர் பதவியின் பதிற்கடமைக்காக உள்ளூராட்சி ஆணையாளரினால் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) வருமானப் பரிசோதகர், வேலை மேற்பார்வையாளர், ஆயுர்வேத மருந்து கலவையாளர், சுடலைக்கூட செயற்படுத்துனர், நூலகர், கனரக வாகன இயந்திர செயற்படுத்துனர், சுகாதாரத் தொழிலாளி, நூலக உதவியாளர், வேலைத்தள தொழிலாளர் மற்றும் சாரதி போன்ற பதவிகளில் காணப்படுகின்ற 12 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் உரிய பணிகள் மற்றும் நோக்கங்களை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுதவற்கு தடையாக இருந்தது.

(இ) கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டொரு உத்தியோகத்தர்களின் மூலம் பரிசோதனைக்கு உட்படும் வகையில் இயலுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பலருக்கிடையே கடமைகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், காசேடு, வைப்புக்கள், கடன்கொடுத்தோர் மற்றும் முற்பணப் பதிவேட்டை பேணிச் செல்லல், காசோலை எழுதுதல், வங்கி கணக்கிணக்கக் கூற்று தயாரித்தல், கணக்கறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல் போன்ற பணிகள் ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மை

### காணி கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்தல்

2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட 07 காணிகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காணி விற்பனைக்குரிய கூறிடல் திட்டத்தை அங்கீகரிப்பதற்கு முன்னர் விற்பனைக்குள்ள காணிக்கூறுகளின், உள்ளபடியான பெறுமதி தொடர்பான மதிப்பீடொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட 21 காணிகள் தொடர்பாக விற்பனை செய்யப்பட்ட காணிகளுக்குரிய 1 சதவீத வரித்தொகை காணி விற்பனையுடன் விற்பனையாளரால் சபைக்குச் செலுத்துமாறு நிபந்தனையில் உள்ளடக்கப்பட்டு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை 06 காணி ஏல விற்பனையிலிருந்து சபைக்கு ஒதுக்கப்பட்ட 02 ஏக்கர் 03 றூட் மற்றும் 36.14 பேர்ச் காணியை உரித்துறுதி மூலம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

தூசுகளற்ற சுற்றுலா வலயத்திற்கு உள்நுழையும் நுழைவுச் சீட்டில் 320 புத்தகங்கள் அச்சிடுவதற்கு சபையின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக சபை அங்கீகாரமின்றி 180 புத்தகங்கள் அச்சிடப்பட்டிருந்தன. அதில் 330 புத்தகங்கள் சபையின் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்ததுடன் எஞ்சிய 170 புத்தகங்களின் அளவு 2018 மார்ச் வரையிலும் கிடைத்திருக்கவில்லை.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 5,265,318 கூட்டுத்தொகையான வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) ரூபா 8,855 பெறுமதியான 23 சிறுவர் பிளாஸ்டிக் கதிரைகள் 2001 ஆம் ஆண்டு முதல் விளைவற்று களஞ்சியத்தில் காணப்பட்டது.

### 3.7 பெறுகைகள்

### 3.7.1 ஒப்பந்த நிர்வாகம்

**தாமஹன சுடலைக்கூட நிர்மாணம்**

சுடலைக்கூடத்தை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக் கம்பனியால் 2016 சனவரி 26 ஆந் திகதி சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 7,966,556 தொகையான இறுதி பட்டியலில் குறைபாடு காணப்பட்டமை மற்றும் சுடலைக்கூடத்தின் எரிவுப் பகுதிக்குரிய விசேட கட்டணப் பட்டியல் (SSR) தொடர்பாக இறுதி இணக்கப்பாட்டிற்கு வராமை என்பனவற்றின் அடிப்படையில் பட்டியலை சிபாரிசு செய்வதற்கு முடியாதிருந்ததாக நிர்மாணத்தை மேற்பார்வை செய்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் 2016 ஆகஸ்ட் மாதத்தில் அறிவித்திருந்த போதிலும், அது தொடர்பாக 2018 மார்ச் வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் சபையின் மீண்டெழும் செலவினங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 48.33 மில்லியனாக இருந்ததுடன் உள்ளபடியான செலவினம் ரூபா 31.31 மில்லியன் ஆனமையால் நிதிஏற்பாடுகளில் ரூபா 17.02 மில்லியன் அதாவது 35 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மூலதனச் செலவினத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 27.66 மில்லியனாக இருந்ததுடன், உள்ளபடியான செலவினம் ரூபா 12.78 மில்லியனாக இருந்தமையால் நிதிஏற்பாடுகளில் ரூபா 14.88 மில்லியன் அதாவது 54 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சபைக்குச் சொந்தமான இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியமையால் ரூபா 2.7 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியான வருமானம் ரூபா 1.58 மில்லியன் ஆனமையால் அந்த வருமானம் 42 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை |
| | | (ii) | வருமானம், செலவினம் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள் குறைத்தும் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டமை |
| | | (iii) | வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பான பேரேட்டுக் கணக்குகள் தயாரிக்கப்படாமை. |
| | | (iv) | இறுதியிருப்பு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படாமை |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | செலவின நிதிஏற்பாடுகளில் குறிப்பிடத்தக்க சேமிப்புக் காணப்பட்டமை |
| | | (ii) | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (இ) | வருமான நிர்வாகம் | | நிலுவை வருமானம் அறவிடப்படாமை. |
| (ஈ) | மனிதவள முகாமைத்துவம் | (i) | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| | | (ii) | வேலையைப் பகிர்வதற்கு முன்வராமை |
| (உ) | கழிவுப் பொருள் முகாமைத்துவம் | | கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று காணப்படாமை. |
| (ஊ) | ஒப்பந்த நிர்வாகம் | (i) | திட்டத்தின் படி வேலை பூர்த்தி செய்யப்படாமை |
| | | (ii) | நிர்மாணம் உரிய பிரகாரம் பராமரிக்கப்படாமை |